1983 பிப்ரவரி 9]

மணவாளக்குறிச்சியிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் மணல்

*வினா எண். 205—திரு. டி. மணி: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம் மணவாளக்குறிச்சியிலிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் மணலிலிருந்து அந்நிய செலவாணி எவ்வளவு கிடைக்கிறது?

(ஆ) அப்பகுதியில் கிடைக்கும் இல்மனைட், நூட்டையின், சுர்கான், மோனசைட் போன்ற மணலிலிருந்து இப்பகுதியில் தொழிற்சாலை ஏதாகிலும் தொடங்க செயற்குறிப்பு உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) 1980–81 நிதியாண்டில் கன்னியாகுமரி மாவட்டம் மணவாளக்குறிச்சி கடற்கரை மணலிலிருந்து பெறப்பட்ட இல்மனைட், கார்னட் மற்றும் சிர்க்கான் முதலிய கனிமங்களின் ஏற்றுமதி மூலம் ரூ.33,15,916 அந்நியச் செலவாணி கிடைக்கப்பெற்றுள்ளது.

(ஆ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. டி. மணி: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே தொழில்கள் இல்லை. தொழில் துறையில் மிகவும் பின் தங்கிய நிலையில் இருக்கிறது. 1967 ஆம் ஆண்டிற்குப் பிறகு எந்தத் தொழிலும் ஆரம்பிக்கப்படவில்லை. இருக்கின்ற தொழில்களை பாதுகாக்க முடியவில்லை என்ற நிலை இருக்கிறது. கடந்த 5 மாதங்களாக 50 ஆயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் பணியாற்றுகின்ற முந்திரி ஆலைகள் மூடப்பட்டு இருக்கின்றன. இந்த நிலையில் மணவாளக்குறிச்சியிலே ஏதாவது ஒரு தொழிலை ஆரம்பிக்க ஆய்வு நடத்தி தொழில் ஆரம்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே கடற்கரை மணலிலிருந்து பெறப்படுகின்ற பொருட்கள் இந்திய அரசினுடைய அணுசக்தி திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மீதம் இருப்பது ஜெர்மனி, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதற்காகச் சுரங்கக் குத்தகை இந்திய அரசினுடைய இண்டியன் ரேர் எர்த்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு லீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன் ஏற்றுமதியின் மூலமாக 33 லட்ச ரூபாய் அன்னியச் செலாவணி கிடைத்திருக்கிறது. அந்தப் பகுதியிலே எந்தத் தொழிலும் இல்லை என்று கூறி ஏதாவது ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்பார்களா என்று கேட்டார்கள். அரசு அதைப் பற்றி பரிசீலிக்கும்.

திரு. டி. மணி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணவாளக்குறிச்சியில் கிடைக்கும் மணலை எடுத்து ஆறுமுக நேரியில் சில கெமிக்கல்ஸ் தயாரிக்கப்படுகின்றன, அப்படிப்பட்ட கெமிக்கல்ஸ் தயாரிக்கிற தொழிலையாவது அந்த பகுதியில் ஆரம்பிப்பதற்கு தமிழ்நாடு அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்னதைப்போல உடனடியாக திட்டங்கள் ஏதும் இப்போது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வை புரிந்து அந்தப் பகுதியில் கிடைக்கும் மூலப்பொருள்களைக் கொண்டு ஏதாவது தொழில் துவங்க முடியுமா என்பதை அரசு பரிசீலிக்கும்.

திரு. செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணவாளக்குறிச்சியில் கிடைக்கிற மணலில் என்னென்ன மூலப்பொருள்கள் இருக்கின்றன என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, அங்கே கிடைக்கிற மணலில் இல்மனைட், நூட்டையின், சிர்கான், மோனசைட் போன்ற மூலப்பொருள்கள் இருக்கின்றன.

சிங்கம் புணரியிலுள்ள ஆதி திராவிடர் மாணவர் விடுதி

*வினா எண். 206—திரு. இரா. அருணகிரி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்கம்புணரி அரிசன மாணவர்கள் விடுதியில் கூடுதலான மாணவர்களை சேர்க்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் வரும் கல்வி ஆண்டே நிறைவேற்றப் படுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) மற்றும் (ஆ): ஆதி திராவிடர் மாணவ விடுதிகளில் மாணவர்களின் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மேல் 10 சதவீதம் வரை மாணவர்களை சேர்க்க மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அரசு ஆணை எண். 862, சமூகநலத் துறை, நாள் 13-11—81-ல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது சிங்கம்புணரி ஆதி திராவிடர் மாணவர் விடுதிக்கும் பொருந்தும்.

திரு. இரா. அருணகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மாணவ விடுதிகளில் அந்த மாணவர்களுக்குரிய இடம் காலியாக இருந்தால் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் சேர்க்கப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.